Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



தனி அலுவலர்/ வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), அகரமேல் ஊராட்சி அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திரு.M.மகேஷ்பாபு

நக.எண். 01/2025 நாள்.16 .04.2025.

பொருள்: மனைப்பிரிவு - பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் அகரமேல் ஊராட்சி சர்வே எண்.80/2A & 3-ல் உள்ள 45 மனைகள் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மற்றும் பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தினால் அனுமதி ஒப்பளிக்கப்பட்டது - ஊராட்சி ஒன்றிய கட்டணம் வசூலிக்கப்பட்டு இறுதி அனுமதி வழங்கி உத்தரவிடல் - சார்ந்து.

பார்வை: 1. உறுப்பினர்-செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் கடித எண்.L1/8160/2019 நாள்.14.11.2019.

--*-*-*

உத்தரவு:

பார்வையில் கண்டுள்ள கடிதத்துடன் சென்னை பெரநகர வளர்ச்சி குழுமம் மற்றும் பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தினால் அகரமேல் ஊராட்சி, அகரமேல் கிராமம் சர்வே எண். 80/2A & 3-ல் கீழ் குறிப்பிட்டுள்ள ஒன்றிய கட்டணங்கள் நிபந்தனைகளுக்குட்பட்டு வசூலிக்கப்பட்டுள்ளது. சென்னை பெரு நகர வளர்ச்சி குழுமம் மற்றும் பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தினால் வரைபட அனுமதியில் குறிப்பிட்டுள்ள உரிய விதிகளுக்குட்பட்டு இறுதி அனுமதி வழங்கி உத்தரவிடப்படுகிறது.

S.No	Amount Details	Demand Draft	Amount
1.	The Special Officer, Agaramel Panchayat (As per G.O.Ms.180 Dated.05.12.2024) Maximum Rs.5/- x 32077 Sqft (round off)	558574/16.04.2025	165385

மேற்படி மனைப்பிரிவு வரைப்படம் சென்னை பெரு நகர வளர்ச்சி குழுமம் வரை படத்தில் குறிப்பிட்டுள்ள மற்றும் பார்வையில் கண்டுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனை விதிகளுக்குட்பட்ட ஊராட்சி இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம். சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் நிபந்தனைகளின்படி எல்லைக் கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவிற்குள் வரும் தெருக்கள் அனைத்தும் சரளைக்கற்களைக் கொண்டு மனுதாரர் நிர்வாக அதிகாரியினால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கு , அகலத்திற்கும் அமைக்கப்பட்டதனை உறுதி செய்துக்கொண்டு அதன் பின்னரே அனுமதி வழங்கப்படவேண்டும்.

2. தகுந்த சிறுபாலங்கள் சாக்கடை வடிகால், துப்புரவு, தெருவிளக்கு முதலிய வசதிகளும் மனுதாரர் அமைத்து தர வேண்டும். மனையின் அளவுகளில் அமைப்பில் மாற்றங்கள் செய்வதோ அல்லது வரையறுக்கப்பட்ட பொது உபயோகத்திற்கான இடங்களில் மாறுதல் செய்வதோ கூடாது.
3. தெரு முனையில் அமையும் மனைகளில் மூலைகளில் அங்கீகரிப்பட்ட வரைபடத்தின் படி திருப்பத்தோடு அமைக்கப்பட வேண்டும்.
4. அங்கீகரிப்பட்ட வரைபடத்தில் விடப்பட்டுள்ள எந்த ஒரு மனையையும் பொது காரியங்களுக்காக பிரித்துக் காட்டப்பட்டுள்ள மனைகள் தவிர குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமல்லாது கடை, பண்டக சாலை மற்றும் குடியிருப்பு இல்லாத குடியிருப்பைச் சொந்த உபயோகத்திற்கல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தக்கூடாது.
5. எந்த ஒரு மனையிலும் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்படவேண்டும். தவிர எக்காலத்திலும், தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவுகளையோ, அமைப்பையோ மாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் திருத்தி அமைப்பதோ உட்பிரிவளிப்பதோ மாறுபட்ட உபயோகத்திற்கோ பயன்படுத்தக்கூடாது.
6. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு கட்டிட வரம்பு 10 அடிக்கு குறையாமல் இருக்க வேண்டும். மனையின் எல்லைக்குள் கட்டிட வரம்பிற்க்குட்பட்ட நிலப்பகுதியின் தெருவில் உ யர் மட்டத்தில் இருந்து 5 அடி உயரத்திற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்த கட்டிடமோ சுவரோ கட்டக்கூடாது.
7. மனையின் பின்புற எல்லைக்குள் கட்டத்திற்குள் இடையில் மனையில் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 15 அடி அளவு உள்ள திறந்தவெளி, எருக்குழி, மாட்டுத் தொழுவம், உந்து வண்டியை நிறுத்த கொட்டகை போன்றவை அல்லது அவை போன்ற குடியிருப்பு அல்லாத ஆனால் அதைச்சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அனுமதிக்கலாம். ஆனால் அக்கட்டிடங்கள் மொத்தமான பின் எல்லையில் நிலத்தின் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்பட்ட மனையின் பின்பக்க மட்டத்திலிருந்து 12 அடி உயரத்திற்கும் மேற்படாமல் இருக்க வேண்டும்.
8. மனையின் பரப்பின் 50 சதத்திற்கும் மேல் கட்டிடம் கட்டக்கூடாது.
9. கடக்கால் போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமப்படுத்த வேண்டும். நிலச்சரிவை நேர் செய்யவோ மனையிலிருந்து மண் தோட்டி எடுத்து பள்ளங்கள் கழுணி ஏற்படுத்தக்கூடாது.
10. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி வீடு கட்டும் திட்டங்களுக்கு உட்படுவதாக எழுத்து மூலமக சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அதிகாரியிடம் ஒப்பந்தம் செய்துக் கொள்ள வேண்டும். மனைகள் விற்பவரையும் மற்றும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் கட்டுப்படுத்தும் வகையில் கட்டுத்திட்டங்கள் மனைப்பிரிவு வரைப்படம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
11. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
12. சாலை வசதி குடிநீர் வசதி மற்றும் மின்சார வசதிக்குரிய அனைத்து கட்டமைப்புகளையும் இந்த மனைப்பிரிவில் செய்து தர வேண்டும்.
13. ஒப்புதல் அளிக்கப்படும் இந்த வரைபட அனுமதிக்கு சென்னை பெரு நகர வளர்ச்சி குழும வரைப்படத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள 1 முதல் 8 வரையிலான நிபந்தனைகள் அனைத்தும் தவறாமல்

பூர்த்தி செய்யப்படவேண்டும். தவறும் பட்சத்தில் மனைப்பிரிவு இறுதி அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.

14. பொதுப்பணித்துறை மூலம் வரைபடத்தில் தெரிவித்துள்ளவாறு நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.
15. வரைபடத்தில் உள்ளபடி சாலையோரம் 0.6 மழைநீர் கால்வாய் அமைக்கப்பட வேண்டும்.
16. வரை படத்தில் உள்ளபடி சாலைகள் அனைத்தும் தார்சாலைகள் அமைக்கப்பட வேண்டும்.
17. வரைபடத்தில் உள்ளபடி சாலையோரம் தெருவிளக்கு மின்கம்பங்கள் அமைக்கப்பட வேண்டும்.
18. வரைபடத்தில் காட்டியுள்ள PP PLOT 1 மற்றும் 2 பூங்காக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் சுற்றி வேலி அமைத்து மரக்கன்றுகள் நடவு செய்து கேட் அமைத்து ஊராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும்.
19. ஊராட்சிக்காக ஒதுக்கப்பட்ட PP PLOT -கள் பூங்காக்களில் எந்தவித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது. மீறும் பட்சத்தில் ஊராட்சிகள் சட்டம் 1994-ந் படி இந்த மனைப்பிரிவு அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.

16/04/25

தனி அலுவலர்/ வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)

அகரமேல் ஊராட்சி.

16/4/25

பெறுநர்:

Mr. G.A. Sridhar,

No.9, 2B, 2nd Floor, Valmigi Apartment, Valmigi Street,

T. Nagar, Chennai - 600 017.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate